**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 224/2021**

**வா.சா.1 – வேலுச்சாமி**

**<u>07–08–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

3. தாவா பூமி ஆதியில் எனது ஆத்தா செல்லம்மாளுக்கும் அவரது சகோதரர் வெங்கடாச்சலத்திற்கும் பாத்தியம். எனது அப்பா பெயர் லச்சுமணக்கவுண்டர். 1975ம் ஆண்டு கிரையப்பத்திரப்படி மேற்படி இருவருக்கும் சொத்தை விறப்னை செய்துள்ளார்கள். அந்த பத்திரப்படி 395 காலையில் 58 செண்டும் பூமியில் 47 செண்ட் பூமியை கிட்டானுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். செல்லம்மாளுக்கும், அவரது சகோதரருக்கு சொத்து பூர்வீக வகையில் பாத்தியம். பூர்வீக வகையில் செல்லம்மாளுக்கும் வெங்கடாச்சலத்திற்கும் எந்த காலையில் எவ்வளவு சொத்து பாத்தியம் என்றால் 395 காலையில் 58 செண்ட். மேற்படி சொத்தை தவிர வேறு காலையில் என்ன சொத்து பாத்தியம் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும்.

4. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் கிட்டானுக்கு 395 காலையில் 47 செண்டு தான் பாத்தியமா என்றால் அதற்கு முன்பே 1 ஏக்கர் பூமியை அதே காலையில் கிரையம் பெற்றுள்ளார். அதை யாரிடம் கிரையம் பெற்றார் என்று தெரியாது. கிட்டானுக்கு விற்பனை செய்தது 395 காலையில் என்ன உட்பிரிவு என்றால் 395/5. 395/5 காலை பட்டாப்படி எவ்வளவு ஏக்கர் என்றால் இரண்டு முன்று நபர்களுக்கு அதில் நிலம் உள்ளதால் மொத்தம் எவ்வளவு என்று தெரியாது. 395/5 காலையில் தான் கிட்டான் 1 ஏக்கர் பூமியை வாங்கினாரா என்றால் இல்லை. கிட்டான் வாங்கிய பூமி எந்த உட்பிரிவில் உள்ளது என்று தெரியாது.

5. எனது வழக்குரையில் மேற்படி 1 ஏக்கர் பூமி 395/5 ல் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 395 ல் உள்ளதாக சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் எனது வழக்குரையில் 7 வது பத்தில் 395/5 ல் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பாதை விட்டது எந்த காலை என்றால் 395 காலை. வருவாய்துறை பட்டாபடி 395/5 காலை என்பது .061 ஹெக்டேர் அதாவது 1 ஏக்கர் 50 1/2 செண்ட் என்றால் சரியல்ல. 395/5 காலையில் மேற்படி விஸ்தீரணம் உள்ள விபரம் வழக்கு தாக்கல் செய்தபோது தெரியும். பட்டாவில் விஸ்தீரணம் தவறாக உள்ளதாக சொல்லும் நான் அது குறித்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை.

6. அளப்பதற்க நடவடிக்கை எடுத்தேன் அவர்கள் வருவதில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்வு எவ்வளவு முறை நடவடிக்கை எடுத்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்தவற்கு 2 மாதம் முன்பு ஒரு முறையும், 1 வருடத்திற்கு முன்பு ஒரு முறையும் எடுத்தேன். அதற்கு பணம் கட்டியதற்கான ரசீது தாக்கல் செய்யவில்லை. 395/5 காலையில் ஆவணப்படி யார் யாருக்கு என்ன பூமி உள்ளது என்று அளப்பதற்கு தயாரா என்றால் தயார். அளந்தால் பிரச்சினை தீர்ந்துவிடும். அளப்பதற்கு இனிமேல்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும் நீதிமன்ற ஆணையர் அளந்து சரிபன்னாமல் இப்பிரக்சினையை தீர்க்க முடியாது.

7. நீதிமன்ற ஆணையர் சொத்தை அளக்காமல் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு வழங்க இயலாது என்பதால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விபரம் தவறாக உள்ளது என்றால் சரியல்ல. எனது ஆத்தா செல்லம்மாள் மற்றும் அவரது சகோதரர் வெங்கடாச்சலம் கிட்டானுக்கு எழுதிக்கொடுத்தபோது 50 செண்ட்ற்கான பணம் ரூ.2000/-த்தை

பெற்றுக்கொண்டு 47 செண்டை கிரையம் கொடுத்து மீதி 3 செண்டை பின்பு கிரையம் கொடுப்பதாக ஒரு சீட்டில் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் மாடுகள் கட்டுவதற்கு இடம் பத்தாது என்பதால் 3 செண்டை எனது ஆத்தா எழுதி கொடுக்கவில்லை அதன் பிறகு வெங்கடாச்சலக் கவுண்டர் எழுதிக்கொடுத்துள்ளார்.

8. அந்த சீட்டு தான் என்னிடம் காண்பிக்கப்படும் சீட்டு என்றால் சரிதான். **அந்த சீட்டு பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது**. (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் மற்றும் கைரேகை எதுவும் இல்லை என்பதால் குறியீடு செய்வதற்கு ஆட்சேபணை செய்தார், அவரது ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) முன்று செண்டை எழுதிக்கொடுக்க சொல்லி பிரதிவாதிகள் கேட்டதால் தான் நான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.